## சரீர வாழ்க்கையைப்பற்றிய கேள்விகள்

### உறவுமுறையிலான சபையில் வாழ்தல்

Wayne Jacobsen



நம் பயணத்தை ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்வது எப்போதும் சரீர வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. நம் வாழ்க்கைப் பாதையில் தேவன் கொண்டு வருகிற மக்களைப் பார்த்து நான் வியப்படைந்துகொண்டேயிருக் கிறேன்; நாம் அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகிற எல்லா மகிழ்ச்சியோடும், விடுதலையோடும் தேவனுடைய ஆவியான வரைப் பின்பற்றவும், தேவனோடும் அவருடைய சரீரத்திலும் எப்படி வாழ்வது என்பதைக் கண்டுபிடிக்கவும் அவர்களும் ஒரு பெரிய விலைக்கிரயம் செலுத்துகிறார்கள்.

சபையில் ஈடுபாடு கொண்டிருப்பதென்றால், அதற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதும், கணக்கு ஒப்புவிப்பதும் என்றும் சிலர் நினைக்கக்கூடும். இப்படி நினைப்பவர்கள், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பகுதியாக இருப்ப தென்றால் என்னவென்பதைத் தவறவிட்டுவிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். மற்ற விசுவாசிகளுடன் நாம் பகிர்ந்துகொள்வதற்கான காரணம், நாம் அவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயத் தினால் அல்ல. கிறிஸ்துவைப்போல் மாறுகிற பயணத்தில் இருக்கிற மற்ற சகோதர சகோதரிகளுடன் கூட்டு உறவைப் பகிர்ந்துகொள்ளாமலிருப்பதை நினைத்துப்பார்க்கவே முடியாது என்பதுதான் காரணம். அவர் களுடைய நட்பும், ஞானமும், ஆதரவும் நம் பயணத்துக்கு தேவனுடைய நிரப்பீட்டின் ஊற்று என்று நாம் காண்கிறோம்.

இப்போது நாம் தனித்தனியாக ஒரு பகுதியை மட்டுமே பார்க்கிறோம் என்றும், கண்ணாடியில் ஒரு மங்க லான பிரதிபலிப்பைப் பார்ப்பதுபோலவே நாம் அவரைப் பார்க்கிறோம் என்றும் பவுல் சுட்டிக்காட்டுகிறார் என்பதை நினைவில்கொள்ளுங்கள் (1 கொரி. 13:9-12). ஆனால், கிறிஸ்துவினுடைய சரீரம் வலைபோல் பின்னப்பட்டிருக்கும் வியத்தகு பின்னல்மூலம் வருகிற உள்ளான பார்வையை அவர் குறிப்பிடும்போது, அது “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவு” என்று அழைக்கிறார் (எபே. 1:23).

ஒத்த பயணத்தில சென்றுகொண்டிருக்கிற மக்களுக்கிடையே உடனடியாக ஏற்படுகிற உறவைக் கண்டு நான் மலைத்துப்போகிறேன். ஆகாயவிமானத்தை விட்டு இறங்கும்போது, நான் அங்கு ஒரு புதியவரைச் சந்திக்கக்கூடும் அல்லது என் மின்அஞ்சல் பெட்டியில் ஒரு புதிய கடிதத்தைப் பார்க்கக்கூடும். அந்தக் கணமே, தேவன் எங்களை ஒத்த பயணத்தில் நடத்திக்கொண்டு போகிறார் என்றும், வாழ்க்கைப் பயணத் தில் நாங்கள் தொடர்ந்து செல்லும்போது நாங்கள் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த முடியும் என்றும், பிரகாசிப்பிக்க முடியும் என்றும் உணர்கிறோம்.

இப்படிப்பட்ட ஐக்கியத்தை அனுபவிப்பதற்காக நான் இருக்கிற தெருவில் அல்லது நான் வாழ்கிற நகரத் தில் அடிக்கடி கூடிவர முடிந்தால் நல்லது. இப்படிப்பட்ட உறவுகளை நான் கட்டாயத்தினால் தேடவில்லை. அவர்கள் இல்லாமல் இந்தப் பயணத்தில் நிலைத்திருப்பதை என்னால் கற்பனைகூட செய்துபார்க்க முடி யாது என்பதால்தான் நான் இப்படிப்பட்ட உறவுகளைத் தேடுகிறேன். உங்களருகே இருக்கிற மற்றவர் களுடன் இப்படி உறவுகொண்டு வாழும் பழக்கம் உங்களுக்கு இல்லையென்றால், உங்களுக்காக இப் படிப்பட்ட உறவுகளை ஏற்படுத்தித் தருமாறு பிதாவிடம் கேளுங்கள் அல்லது அவர் ஏற்கெனவே உங்களுக் குத் தந்திருக்கும் சிலரிடம் இதை வளர்த்துக்கொள்ளுங்கள்.

*சரீரவாழ்க்கையின்* இந்த இதழில் அதை நாம் கொஞ்சம் வாழ்ந்துகாட்டப் போகிறோம். கடந்த மூன்று மாதங்களில் நான் சிலரிடம் கொண்டிருந்த கடிதப் போக்குவரத்தை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகிறேன். “நான் இனிமேல் ஏன் சபைக்குப் போவதில்லை” என்ற கடைசி இதழ் பலருக்குத் தைரியத் தைத் தந்திருப்பதுபோல் தோன்றுகிறது. சிலருக்கு, அவர்களுடைய போராட்டங்களுக்குப் பொருத்தமான கேள்விகள் எழுந்துள்ளன. வேறு சிலருக்கு, சுவாரஸ்யமான உட்பார்வைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர் களுடைய கதைகளையும், என் சில பதில்களையும் கேட்டு நீங்கள் உற்சாகமடைவீர்கள் என்று நான் நினைக்கிறேன். சரி, விருந்தை அனுபவியுங்கள்.

### G.C. தெற்கு கரோலினாவிலிருந்து

உங்கள் இரண்டு புத்தகங்களையும் நாங்கள் அனுபவித்து மகிழ்கிறோம். இதுபோல நினைக்கிற சில நண் பர்களை எங்கள் சமுதாயத்தில் கண்டுபிடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! சில நண்பர்கள் ஒரு “வீட்டு ஐக்கியத்தை” ஆரம்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு காரியம் சொல்ல விரும்புகிறேன். ஆனால்,

அதை சொல்வதை நானே வெறுக்கிறேன். அது ஏற்கெனவே இருந்த அதே பழைய காரியம்தான். நாங்கள் உண்மையான நண்பர்களைத் தேடுகிறோம். ஆனால், அவர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக் கிறது. நாங்கள் நிறுவனரீதியான சபையை விட்டு வெளியே வந்துவிட்டோம். இப்போது சபைக்குப் போகாத அநேக தம்பதிகளை எங்களுக்குத் தெரியும். ஆனால், இந்தக் கருத்து அநேகருக்கு மிகவும் அந்நியமாகத் தோன்றுகிறது. அவர்கள் எந்த அளவுக்குக் காயப்பட்டிருக்கிறார்கள் என்றால், சபைக்குப் போவதைவிட வீட்டில் இருப்பதையே விரும்புகிறார்கள். ஆனால், அவர்கள் காலியாக இருக்கிறார்கள், சந்தோஷமாகவும் இல்லை. எங்கள் வாழ்க்கையின் இந்தக் கட்டம் மிகவும் கஷ்டமாகிவிட்டது. என் கணவர் சபையில் எப்போதுமே ஒரு "மூப்பராக" இருந்தார். இப்போது என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குத் தெரிய வில்லை. தொலைந்துபோனவர்களைப்போல் இருக்கிறோம். தயவுசெய்து எங்களுக்காக ஜெபியுங்கள்.

*வேய்ன்: தொலைந்துபோனவர்களைப்போல் தோன்றினாலும், நீங்கள் தொலைந்துபோனவர்கள் இல்லை என்பது நிச்சயம். நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று தேவனுக்குத் தெரியும். அவர் விரும்பு வதுபோல், உங்களைத் தம் சரீரத்தில் வைக்க அவரால் முடியும். அது, நீங்கள் இதற்குமுன் கற்பனை செய்ததுபோல் தோன்றாமல் இருக்கலாம். ஆனால், அது நீங்கள் இதுவரை அறிந்ததைவிட சிறந்ததாக இருக்கும். என் மனதுருக்கமும், ஜெபமும் உங்களுக்கு எப்போதும் உண்டு. இந்த நேரங்கள், குறிப் பாக விசுவாசிகள் மதத்தில் மட்டும் அல்ல, மற்ற விசுவாசிகளுடன் நடந்தும் அழிந்தொழிந்துபோன தால், எவ்வளவு கஷ்டமாக இருக்க முடியும் என்று எனக்குத் தெரியும். ஒருவேளை, பழைய பசி மீண் டும் எழும்ப அவர்களுக்குக் கொஞ்சம் நேரம் தேவைப்படலாம். மதத்தால் மக்கள்மேல் எப்படிப்பட்ட சேதத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நினைக்கும்போது அது வியப்பாக இருக்கிறது. நான் அங்கு வந்து, தேவனுடைய மக்கள் யாரையாவது உற்சாகப்படுத்துவது பிரயோஜமான இருக்கும் என்று நீங்கள் நினைத்தால் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.*

**C.G., டெக்சாஸ்**

*சரீரவாழ்க்கையின்* மே மாத இதழில் உங்கள் கட்டுரையை நான் வாசித்தேன். என் குடும்ப வாழ்க்கையில் உண்மையாகவே சம்பந்தப்பட்ட இந்த விவகாரத்தைக்குறித்த கொஞ்சம் வெளிச்சத்தை நீங்கள் பகிர்ந்து கொண்டதற்காக நான் நன்றி கூறுகிறேன். நாங்கள் இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறோம். ஆனால், சபை களில் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவம், "தண்ணீர், தண்ணீர், எங்கும் தண்ணீர்...ஆனால், குடிப்பதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை" என்ற ஒரு பழைய பழமொழியின்படி இருக்கிறது. எந்த சபையிலும் ஒரு "வீட்டைக்" கண்டுபிடித்துவிடடோம் என்பதுபோன்ற உணர்வு எங்களுக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. எனவே, குற்ற உணர்வினால் நான் வாதிக்கப்பட்டிருக்கிறேன்; என்னிடத்தில்தான் ஏதோவொன்று தவறாக இருக்கிறதோ என்று நான் அஞ்சுகிறேன். கடந்த 25 ஆண்டுகளில் நாங்கள் 4 சபைகளுக்குச் சென்றிருக் கிறோம். நாங்கள் சடைசியாகச் சென்ற சபையிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குமுன்பு வெளியே வந்தபோது, பாஸ்டருடைய ஆசீர்வாதத்தை வேண்டி நான் அவருக்குக் கடிதம் எழுதினேன். அதற்கு அவர் உத்தமத்தைப் பற்றிய ஓர் ஒலிநாடாவை எனக்கு அனுப்பிவைத்தார். எந்த ஆசீர்வாதமும் வரவில்லை. அவர் எனக்கு நன்மையையே விரும்பினார் என்று எனக்குத் தெரியும்; ஏனென்றால், அவர் என்னை நேசிக்கிறார். நான் அவருடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். உங்கள் கட்டுரையில் எழுதியிருப்பதுபோன்ற ஒரு பதிலை நான் அவருக்கு எழுதினேன்; "நாமெல்லாரும் ஒரே சபையின் ஒரு பகுதி. நாம் சகோதரர்கள், நண்பர்கள். என் வாழ்நாளெல்லாம் நான் உங்களுக்கு உத்தமமாக இருப்பேன். நான் உங்களை நேசிக் கிறேன்...நாம் இருவரும் இயேசுவின் ஒரு பகுதி." ஆறு ஆண்டுகளுக்குப்பிறகு, இன்னும் அதே பிரச்சினை களோடு போராடுகிறோம். இப்போது நாங்கள் ஓர் "எழுப்புதல்" சபையில் மூப்பர்களாக இருக்கிறோம். சபையில் சமீபத்தில் நடந்த மூப்பர்களின் கூட்டத்தில், "யாருக்காவது குறிப்பிட்ட எந்த சேவையை அல்லது ஆராதனையைக்குறித்த பாரமோ அல்லது அக்கறையோ இருக்கிறதா?" என்று கேட்டார்கள். நான் நேர்மை யாகப் பதிலளித்தேன். ஏனென்றால், சமீபத்தில் நடந்த ஓர் ஆராதனையில் கொடுக்கப்பட்ட செய்தி விசுவாசிகளைப் பிரகாசிப்பதற்கும், ஆறுதல்படுத்துவதற்கும் பதிலாக, அவர்களைக் குழப்பியிருக்கும் என்றும், தொந்தரவுபடுத்தியிருக்கும் என்றும் நான் நினைத்தேன். அன்றிரவு அந்தப் பாஸ்டர் என்னைத் தெலைபேசியில் அழைத்து, "எல்லாருக்கும் முன்பான இனிமேல் ஒருபோதும் என்னை இப்படி இழிவு படுத்த வேண்டாம்," என்று என்னை எச்சரித்தார். வெளிச்சத்தையும், ஜீவனையும் மக்களுக்குத் தொடர்ந்து கொண்டுவாருங்கள்...உங்கள் கனிவான, உறுதிப்படுத்தும் வார்த்தைகளுக்கு நன்றி. யாரோ ஒருவர் புரிந்துகொள்கிறார்! இதை இவ்வளவு எளிமையாக வைத்துக்கொள்வது ஏன் கடினமாக இருக்கிறது–– இயேசுவை முழு இருதயத்தோடு நேசிப்போம், மற்றவர்களையும் நேசிப்போம்.

*வேய்ன்: நீங்கள் கடந்துவந்திருக்கிற வேதனையான அனுபவங்களுக்காக வருந்துகிறேன். ஆனால், அதே நேரத்தில், அமைப்புரீதியான மதத்தின் 'ஒத்திருக்கச்செய்யும் இயக்கவிதிகளை'விட உங்கள் மனசாட்சியை நீங்கள் மேலாக மதித்தது வியத்தகு ஆசீர்வாதமாகும். ஒரு நிறுவனத்தின் தேவைகளும், அந்த நிறுவனத்தில் தங்களை 'இராஜாக்களாகக்' கருதுபவர்களின் தேவைகளும் பிரதானமாக வைக்கப் பட்டு, உறவுமுறையிலான வாழ்க்கை பின்னுக்குத் தள்ளப்படும்போது, அது எவ்வளவு குழப்பமாகவும், ஏமாற்றமாகவும் இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால், ஏமாற்றம் ஒரு பெரிய காரியமாக இருக்க முடியும். நாம் ஏமாற்றம் அடைந்துவிட்டோம் என்றால், நாம் தள்ள வேண்டிய மாயைகள் நம்*

*மிடம் இருந்தன என்று பொருள். தேவன் மெய்யாகவே எப்படி இருக்கிறார் என்பதையும், சபையை அவர் மெய்யாகவே எப்படிப்பட்டதாக ஆக்கிக்கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் பார்க்க நமக்கு உதவுவதற்காகவே தேவன் இவைகளை அனுமதிக்கிறார்.*

*உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருப்பதுபோல், சில நேரங்களில், இது நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு வேதனையாக இருந்தாலுங்கூட, இது அற்புதமான பயணம். என் இருதயம் உங்களை நாடு கிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் நேர்மையும், கபடமின்மையும் எல்லாருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்க முடியும். இங்கு தேவனுடைய பிரசன்னமே மையமாக இருக்க வேண்டும் என்று வாஞ்சிக் கிறோம். ஆனால், மற்றவர்கள் அப்படி நினைக்காவிட்டாலுங்கூட தேவன்மேல் நாம் அப்படிப்பட்ட தாகம் கொண்டிருப்பது எளிதல்ல என்று எனக்குத் தெரியும்.*

*ஆனால், தேவன் உங்களில் ஏதோவொன்றைச் செய்துகொண்டிருக்கிறார். அது உங்களை இன்னும் விடுதலையான நபராக மாற்றும்; இதன் விளைவாக, தேவன் உங்கள்மூலம் மற்றவர்களுக்கு ஊற்ற விரும்புகிற அவருடைய ஜீவனுக்கு இன்னும் அதிக உண்மையான சாட்சியாக நீங்கள் மாறுவீர்கள். முன்னேறிச் செல்லுங்கள், சகோதரனே! மிகச் சிறந்தது வெகு தூரத்தில் இல்லை. நீங்கள் காணப் போகும் மகிழ்ச்சியால் நிச்சயமாக நீங்கள் திக்குமுக்காடிப்போவீர்கள்.*

**S.V., தென் ஆப்பிரிக்கா**

கடந்த வருடத்தில கர்த்தர் எங்கள் சபையில் செய்திருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் உங்கள் சில கட்டுரைகளை வாசித்தது எனக்கு ஆசீர்வாதமாக இருந்தது. நாம் பித்துப்பிடித்தவர்கள் அல்ல என்பதை அறிய நமக்கு சாட்சிகள் தேவைப்படுகின்றன. ஒரு வருடத்திற்குமுன நான் என் "பாஸ்டர்" பதவியை இராஜினாமா செய்தேன். "மக்களை என்னைப் பார்க்கவிடாதபடிக்கு, அவர்களுடைய கண்களை உன்மேல் அல்லது நிறுவனத்தின்மேல் குவிக்கும்படிக்கு நீ உருவாக்குகிற எல்லா அமைப்புமுறைகளுக்காகவும் எனக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருக்கும்," என்று தேவன் என்னிடம் பேசியதாக நான் உணர்ந்தேன். பிரச்சினை நம் இருதயங்களில்தான் இருக்கிறது என்றும், அமைப்புமுறை தன்னில்தானே குற்றமற்றது என்றும், ஆனால் நமக்குப் பேர் உண்டாக்க நாம் அவைகளைப் பயன்படுத்துகிறோம் என்றும் எனக்குத் தெரியும். சபையில் மாற்றங்கள் ஏற்படுவதற்குமுன், 150-200 பேர் கூட்டங்களில் கலந்துகொண்டார்கள். இப்போது 40-60 பேர்தான் கலந்துகொள்கிறார்கள். எண்ணிக்கை இன்னும் குறைந்துகொண்டிருக்கிறது. பிதா விரும்புவது இதுதான் என்றால், எங்களுக்கும் எங்களோடு இருப்பவர்களுக்கும் எதிர்காலத்தில் பிரயோஜனமாக இருக்கக்கூடிய உறவு உள்ள இடத்தைக் காண்பிக்கும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். உங்கள் அனுபவத்தில், இப்போது எங்களைச்சுற்றி இருக்கும் ஐக்கியத்தை விடுதலையான உறவுமுறையி லான சமுதாயமாக மாற்றிவிடலாமா அல்லது ஞாயிற்றுக்கிழமை ஆராதனையை முழுவதும் நிறுத்திவிட்டு, தரிசனம் உள்ளவர்களுடன் சேர்ந்து செல்ல வேண்டுமா?

*வேய்ன்: ஆட்டுக்குட்டியானவர் எங்கு நடத்தினாலும் அவரைப் பின்பற்றிச் செல்ல, இந்த அளவுக்கு இடர்களைச் சந்திக்கச் சித்தமாயிருக்கிற ஒருவரைப் பார்ப்பது என்னே மகிழ்ச்சி! ஒரு கூட்டம் மக்களை நாம் நினைப்பதுபோல் அப்படி மாற்றிவிட முடியாது. நிச்சயமாக நீங்கள் இதைப்பற்றிக் கேட்கவில்லை என்று நான் நினைக்கிறேன். ஒரு கூட்டம் மக்களை அப்படி மாற்றுவது மனிதனுடைய வேலை அல்ல, அது தேவனுடைய வேலை. என்ன செய்ய வேண்டும் என்று தேவன் உங்களிடம் கூறியிருக்கிறாரோ, அதைத் தொடர்ந்து செய்யுங்கள். அவர் உங்களுக்குக் கற்றுத் தந்திருக்கும் கோட்பாடுகளின் இட அமைப்பில் அவருடைய சத்தத்தைப் பின்பற்றுகிறீர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அவருடைய சத்தத்தைக் கேட்காமல் வெறுமனே கோட்பாடுகளைப் பின்பற்றாதீர்கள். தேவனால் உங்களைக் கோடிக்கணக்கான வழிகளில் நடத்த முடியும். உண்மையில் ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனை சபை இல்லை என்பதை உணர்ந்து, மக்கள் மற்றவர்களுடன் கொள்ளும் உறவுகளின் மூலம் தங்கள் வீடுகளில் உண்மையான உயிருள்ள சபையைக் காண அவர்களை உற்சாகப்படுத் துங்கள். அதே நேரத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தைப் பயிற்சிக்கான நேரமாக வைத்துக் கொள்ளலாம். அந்தக் குழுக்களை நாம் நிர்வகிக்கும்போது, பொதுவாக, அவர்கள் இயேசுவைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக நம்மைச் சார்ந்திருக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அல்லது அதை மூடி விட்டு தரிசனம் உள்ளவர்களோடு சேர்ந்து செல்லுமாறு தேவன் நடத்தக்கூடும். முற்றிலும் புதிதான தொன்றை தேவன் பிறப்பிக்கட்டும். சரியா, தவறா என்ற கேள்வி இங்கு எழவில்லை என்று நான் நினைக்கிறேன். வெவ்வேறு இடங்களில், தேவன் பல்வேறு வழிகளில் இதைச் செய்வதை நான் பார்த் திருக்கிறேன்.*

*ஆயினும், பெரும்பாலும் குழுக்கள் இப்படி "முற்றிலும் மாறுவது" அபூர்வமாகவே நிகழ்கிறது. சிலர் மாறுவார்கள். பலர் மாற மாட்டார்கள். மாற விரும்புகிறவர்கள், நிறுவனத்தைக் காப்பாற்ற விரும்புகிற வர்களால் வெளியே தள்ளப்படுகிறார்கள். மாற்றத்தை விரும்பாதவர்கள், அதிக "நிலையானது" என்று அவர்கள் நினைக்கிற மற்ற நிறுவனங்களுக்குள் மங்கி மறைந்து போகிறார்கள். ஆனால், இது மிகவும் அபூர்வம். தேவன் உங்களுக்காக என்ன விரும்புகிறார்? எனக்குத் தெரியாது. ஆயினும், தேவன் உங்*

*களுக்கு ஞானத்தைத் தருமாறும், உங்கள் ஜென்மசுபாவமான மனிதனுக்கும், உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினாலுங்கூட, உங்கள் இருதயத்தில் அவர் உணர்த்துவதைப் பின்பற்ற அவர் உங்களுக்குத் தைரியத்தைத் தருமாறும் நான் ஜெபிப்பேன். அதுதான் பயணத்தின் மிகக் கடினமான பகுதி.*

இந்த அசைவு உலகமெங்கும் எவ்வளவு பெரியது?

*வேய்ன்: எனக்கு வருகிற மின்அஞ்சல்களையும், எனக்கு இருக்கிற தொடர்புகளையும் பார்க்கும்போது இது பரந்ததுதான். ஆனால், இது ஓர் இயக்கம் என்று நான் நினைக்கவில்லை. இது ஓர் இயக்கமாக மாற வேண்டும் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. மக்கள் இயேசுவைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு, ஒரு மாதிரியைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டால், அது செத்துவிடும். தேவனுடைய சபையின் மையத்தில் மீண்டும் இயேசுவிடம் செல்ல வேண்டும் என்ற பசி இருப்பது பெரிய விஷயம். ஆனால், அது பல்வேறு வழிகளில் தன்னை வெளிக்காண்பிக்கிறது. "பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்ட" எல்லாக் குழுக்களும் ஆரோக்கியமானவை என்றும் சொல்ல முடியாது. சிலர் ஏமாற்றம் அடைந்ததின் விளைவாக அமைப்பு ரீதியான மதத்தைப் புறக்கணித்திருக்கிறார்கள். ஆனால், தங்களை மாற்ற இயேசுவை அனுமதிப்பதற்கு அவர்கள் அவருக்கு நெருக்கமாக வளரவில்லை. இது துக்கத்தை ஏற்படுத்துகிறது. அவர்களுடைய அமைப்புமுறைகள் இன்னும் அதிகமாகத் தந்திரமாகக் கையாளுபவைகளாகவும், கட்டுப்படுத்துபவைகளாகவும் மாற முடியும்.*

இஸ்ரவேல் மக்கள் சவுல்போன்ற ஓர் இராஜாவைத் தேடியதுபோல, இன்று மக்கள் ஓர் இராஜாவைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், தங்கள் சார்பில் தேவனிடம் பேசுவதற்கு இஸ்ரவேல் மக்கள் மோசேயைக் கேட்டுக்கொண்டதுபோல், அவர்கள் ஒரு பிரதான ஆசாரியனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தோன்றுகிறது. இந்தப் பதவிகளை எடுத்துக்கொள்ள மனிதர்களும் ஆர்வமாக இருப்பதுபோல் தோன்றுகிறது.

*வேய்ன்: நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால், இது துக்கத்தைத் தருகிறது.*

நான் என்ன செய்ய வேண்டும் என்பதற்காகத் தேவன் என்னை அழைத்தாரோ, அதை நான் செய்யாமல் போய்விடுவேனோ என்ற, நான் என் சௌகரியம் என்ற மண்டலத்தில் இருந்துகொண்டு, இராஜ்ஜியத்தில் ஒன்றுக்கும் உதவாமல் போய்விடுவேனோ என்ற, திட்டவட்டமான குற்ற உணர்ச்சியும், பயமும் என்னிடம் இருக்கின்றன. கடந்த சில மாதங்களில் இதுதான் என் மிகப் பெரிய போராட்டம். தேவன் என்னிடம் என்ன சொல்லியிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறதற்கு நான் உத்தமமாக இருந்தால், நான் வெற்றிபெற்றவனாக அல்லது வீரியமுள்ளவனாகத் தோன்றாமல் போகக்கூடும். ஆனால், குறைந்த பட்சம், நான் உண்மையுள்ள உக்கிராணக்காரனாக இருப்பேன்.

*வேய்ன்: நிறுவனத்தின் வல்லமை எப்படி வேலைசெய்கிறது என்பதை இங்கு நாம் துல்லியமாகப் பார்க்கிறோம். மற்றவர்கள் நம்மை வெற்றியுள்ளவர்களாகப் பார்க்க வேண்டும் என்ற நம் எண்ணத்தை நிறுவனம் தந்திரமாகக் கையாண்டு, அது நம்மை அதின் இலக்குகளுக்கு ஏற்றார்போல் வளைக்க நம்மை அழுத்துகிறது. இது ஆவியானவர் நம் இருதயங்களில் உடைக்க வேண்டிய மிகக் கடினமான கட்டு என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. கூட்டாளிகள், முன்னாள் "சபைவாசிகள்," மற்றவர்கள் ஆகியோர்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்றாமல் போகும்போது, அவர்கள் தங்கள் தீர்ப்பை நம்மேல் வழங்குகிறார்கள். அப்போதுதான் நாம் உண்மையாகவே தேவனைப் பின்பற்றுகிறோமா அல்லது நம்மைப்பற்றிய மனிதர்களின் அபிப்பிராயத்தினால் நாம் அடக்கப்படுகிறோமா என்று நாம் கண்டுகொள்வோம். "நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால், நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே," என்ற பவுலின் வார்த்தைகளை நினைவில்கொள்ளுங்கள். அவர் அங்கு உலகத்தில் உள்ள மக்களைப்பற்றி அல்ல, மாறாக மற்ற சகோதரர்களைப்பற்றித்தான் பேசுகிறார். ஒரு காரியத்தை என்னால் சொல்ல முடியும். உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய திட்டவட்டமான நடத்துதலை நான் பார்க்கிறேன், கேட்கிறேன் என்று நான் நினைக்கிறேன். இதைப் பின்பற்ற, நீங்கள் ஒருபோதும் கற்பனைகூட செய்யாத அளவுக்கு, மிகப் பெரிய விலைக்கிரயம் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், இதன் முடிவில், தேவனுடைய ஜீவன் உங்கள்மூலம் நிறைவாகப் பாய்ந்தோடி, நீங்கள் ஒருபோதும் கற்பனைசெய்யாத அளவுக்கு மற்றவர்களுடைய வாழ்க்கையைத் தொடும் என்று நான் நம்புகிறேன்.*

பாடுகளின்மூலம் இயேசு இராஜ்ஜியத்தின் கீழ்ப்படிதலுக்குள் நுழைந்தார். நாமும் உபத்திரவங்கள்மூலமாகத்தான் அதில் நுழைவோம் என்று அவர் கூறினார். எனவே, நான் ஏங்கிக்கொண்டிருக்கிற இளைப்பாறுதலின் இடத்துக்குச் செல்ல எந்தக் குறுக்கு வழியும் இல்லை என்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் ஒரு கேள்வி எழுகிறது: உள்ளான குழப்பம் என்ற என் சொந்த உலகத்துக்குள் என்னைக் கட்டிவைத்து, என்னை முற்றிலும் செயலிழந்தவனாக்குகிற வஞ்சகத்தை நான் எப்படி கண்டுபிடிக்க முடியும்? ஒருவேளை இதற்கான பாதுகாப்பு "ஒவ்வொரு நாளும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்" என்பதில் இருக்

கிறதோ. எனவேதான் நான் என் இருதயத்தை உங்களுக்கும், வேறு சில சாட்சிகளுக்கும் திறந்துகாண்பிக்கிறேன்.

*வேய்ன்: இவை நிச்சயமாக உதவும். ஆனால், இறுதியாக, அவர் நம்மில் ஆரம்பித்ததை முடிப்பதற்கு நாம் அவரையே நம்ப வேண்டும். நம் கண்கள் எப்போதும் அவர்மேலேயே இருக்க வேண்டும். “வேய்ன், உங்களால் தேவனுடைய சத்தத்தைத் தெளிவாகக் கேட்க முடியும் என்ற நம்பிக்கை உங்களிடம் இருக்கிறதா?” என்று மக்கள் என்னிடம் கேட்கும்போது, நான் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்துவிடுகிறேன். ஏனென்றால், என்மேல் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை. ஆனால், “வேய்னே, தேவன் தம் சித்தத்தை உங்களுக்குத் தெளிவாகக் கூறக்கூடிய அளவுக்குப் பெரியவர் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?” என்பதுதான் உண்மையான கேள்வி. இந்தக் கேள்விக்கு* **ஆம்** *என்று என்னால் ஆணித்தரமாகப் பதில் சொல்ல முடியும். அவர் அவ்வளவு பெரியவர். என் சுயநலம், தன்னலம் என்ற கண்ணிகளில் நான் சிக்கித் திணறிய வேளைகளிலுங்கூட அவர் அதைச் செய்திருக்கிறார். இன்றைக்கும் அவரால் அதைச் செய்ய முடியும் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.*

பிரச்சினை நம் இருதயங்களில் இருப்பதுபோல் தோன்றுகிறது. நாம் அதை எப்படி மேற்கொள்ளப்போகிறோம்? நான் எப்போது எனக்காகப் பேர்பிரஸ்தாபம் உண்டாக்கிக்கொண்டிருக்கிறேன்? “போதகர்” என்ற பட்டப்பெயரைப் பயன்படுத்தாமல், மக்கள் தங்கள் இருதயத்தில் என்னைப் “போதகர்” என்று அழைக்கும்போது, அதில் இன்புறுகிற இருதயத்தோடு நான் எப்போது போதகனாகச் செயல்படுகிறேன்? நாம் மனிதர்களைத் “தலைவர்கள் அல்லது போதகர்கள்” என்று அல்லது வேறு ஏதாவது பட்டப்பெயர் கொடுத்து அழைக்கக்கூடாது என்பதில் இயேசு பிடிவாதமாக இருந்தார் என்று நான் விசுவாசிக்கிறேன். ஏனென்றால், இந்தப் பிரச்சினையைப்பற்றி அவருக்குத் தெரியும். “பாஸ்டர்” என்ற பதவியிலிருந்து நான் இராஜினாமா செய்தபிறகு, கடந்த 10 மாதங்களில் மிகக் கஷ்டமான ஒரு காரியத்தை நான் அனுபவித்திருக்கிறேன். அதை நான் மக்களுடைய கண்களிலும், பிள்ளைகளுடைய கண்களிலும் பார்க்கிறேன். மக்கள் தலைவர்களுக்குக் கொடுக்கிற ஒரு பதவி ஆத்துமாவின் மண்டலத்தில் இருக்கிறது; அது தலைவர்களைப் பீடத்தில் தூக்கிவைக்கிறது; தலைவர்கள் அதை மறுப்பதுபோல் தோன்றினாலும், அதின் இன்புறுகிறார்கள். இதைத்தான் நான் அதிகமாக இழந்துவிட்டேன். இதனால் நான் திகைப்படைகிறேன்!!! யார் என்னை விடுவிப்பார்?

*வேய்ன்: அவர் ஏற்கெனவே உங்களை விடுதலையாக்கிவிட்டார். தேவனுடைய சபை உண்மையாக எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பார்க்காதபடிக்கும், பெரும் மகிழ்ச்சியோடும் வல்லமையோடும் சபையாக வாழாதபடிக்கும், இப்படிப்பட்ட பட்டங்களும் வல்லமையும் உங்களை எப்படித் தடுத்துவிட்டன என்று நீங்கள் தொடர்ந்து பார்க்கும்போது, அவைகளை அற்பமாக எண்ணும் நாள் வரும். உள்ளூர்-பரிசுத்தமனிதன்-குரு என்ற பாராட்டுகளில் திளைக்க வேண்டும் என்ற ஆசை உங்களில் இருப்பதால் நீங்கள் திகைத்துப்போகிறீர்கள். இது, நீங்கள் விடுதலை பெறுவதற்கான வழியில் இருக்கிறீர்கள் என்பதற்கான நிச்சயமான அடையாளமாகும்.*

நான் முன்கூட்டியே பதில் அனுப்பாததற்காக வருந்துகிறேன். சில காரியங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. எனவே போதுமான நேரம் இல்லாமல் போயிற்று. மேலும், பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்ல விரும்பினார் என்று நான் புரிந்துகொள்ள வேண்டியிருந்தது.

*வேய்ன்: பரவாயில்லை! நீங்களே தேவனிடத்தில் இந்தக் காரியங்களைச் சரிசெய்துகொள்ள வேண்டும் என்றும், நான் சொல்லக்கூடியதை தேவன் உங்களுக்குக் காண்பிப்பதோடு இணைத்து நிறைவாக்கப் பயன்படுத்தலாம் என்றும் நான் விரும்புவேன். நான் சொல்வதைப் பிரதானமாக எடுத்துக்கொண்டு, தேவன் காண்பிப்பதை அதனுடன் இணைத்து நிறைவாக்க முயற்சிக்க வேண்டாம். தேவன் உங்களை நடத்திவந்திருக்கிற விதத்தையும், அவர் உங்கள் மனசாட்சியில் ஆழமாக விதைத்திருக்கும் காரியங்களையும் நான் அனுபவித்து மகிழ்கிறேன். தேவன் உங்கள் கண்களைத் திறக்காமல் இருந்திருந்தால், நீங்கள் இப்போது நடந்துகொண்டிருக்கும் இடத்தில் உங்களால் நடந்துகொண்டிருக்க முடியாது. உங்கள் இருதயத்தில் எரிந்துகொண்டிருக்கும் காரியங்கள் நிச்சயமாக அவரிடமிருந்து வந்தவை. அவரைப் பின்பற்ற நீங்கள் பெரிய விலைக்கிரயம் செலுத்தச் சித்தமாயிருக்கிறீர்கள் என்ற உண்மை இதை இன்னும் அதிகமாக உறுதிப்படுத்துகிறது. தனிப்பட்ட சந்தர்ப்பவாதம் ஒருவனை நீங்கள் நடந்துகொண்டிருக்கும் பாதையில் ஒருபோதும் நடத்திச்செல்லாது.*

சில வேளைகளில் மனசாட்சியோடு வாழ்வது ஒரு சவாலான காரியமாக இருக்கும். விட்டுக்கொடுத்து, மற்றவர்களுடன் ஒத்துப்போவதும், மதரீதியான அமைப்பில் எது கொஞ்சம் நன்மையை உண்டாக்க முடியுமோ அதை எடுத்துக்கொண்டு, மற்றவர்கள் நமக்குச் சாதகமாகப் பேசி நம்மைத் தட்டிக்கொடுப்பதை அனுபவித்துக்கொண்டு போவதும் எளிதாக இருக்காதா? ஆனால், அங்கு ஜீவன் இல்லை. அது ஒரு மாயை. தன்னால் செய்யமுடியாததை அது வாக்குத்தத்தம் செய்கிறது. உங்கள் இருதயத்தில் தேவன் வைத்திருப்பதைத் தொடர்ந்து பின்பற்றுங்கள். பழையன மரித்துப்போகும்போது, நீங்கள் இதுவரை ஒருபோதும் கற்பனைகூட செய்திராத மாபெரும் மகிழ்ச்சியையும், விடுதலையையும், கனிகொடுத்தரையும் நீங்கள் காண்பீர்கள்.

இந்த மின்அஞ்சல் பரிமாற்றத்தில் மூப்பர்கள், தலைமைத்துவம், சம்பளம்கொடுத்தல், கூடி வருதல் ஆகியவைகளைப்பற்றியும் பரிசீலனைசெய்தோம். அவையெல்லாவற்றையும் இங்கு தர இயலவில்லை. ஆனால், நீங்கள் வாசிக்க வேண்டும் என்று விரும்பினால், எங்கள் பரிமாற்றத்தின் மற்ற பகுதிகளை நான் இன்னொரு பக்கத்தில் சேர்த்திருக்கிறேன்.

**A.M., Massachusetts**

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இது உங்கள் சொந்த வாழ்க்கையோடு சம்பந்தப் பட்ட கேள்வி. எனவே, இதற்கு நீங்கள் பதில் சொல்வீர்களா என்று எனக்குத் தெரியாது. அப்படிப் பதில் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை: "நம் குழந்தைகளுக்கு நன்னெறிகளையும், சட்டதிட்டங்களையும் போதிப்பதற்குப்பதிலாக, முற்றிலும் தேவனுடைய ஜீவனில் வாழ்வது எப்படி என்று நாம் அவர்களுக்கு செய்துகாட்ட வேண்டும்," என்பதைப்பற்றி நமக்கு நிறையத் தெரியும். எனவே, இப்படி வளர்க்காமல், உங்கள் குழந்தைகளை வேறு வகையில் வித்தியாசமாக வளர்த்திருப்பீர்களா? உங்கள் எழுத்தை நான் எவ்வளவாய்ப் பாராட்டுகிறேன் என்பதைப்பற்றி என் இருதயத்தில் இருக்கிற எல்லாவற்றையும் என்னால் சொல்ல முடியாது. அவருடைய சத்தியம் தொடர்ந்து உங்கள்மூலம் வெளிவரட்டும்.

> *வேய்ன்: உங்கள் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. வித்தியாச மாகச் செய்வதற்கு நிறையக் காரியங்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. உறவுமுறையி லான சூழலில்தான் நாங்கள் எங்கள் பிள்ளைகளை வளர்த்தோம் என்றும், அவர்கள் பாவம் செய்யும் போது அல்லது தோற்றுப்போகும்போது எப்படி தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் என்று அவர்களுக் குக் கற்பித்தோம் என்றும் நான் நினைக்கிறேன். அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக் கிறேன். அவர்கள் வளர்ந்து வந்த வருடங்களில் மற்ற குடும்பங்களோடு சேர்ந்து வீட்டு ஐக்கியங்களில் ஈடுபாடு கொள்ளவும் நாங்கள் அவர்களை உற்சாகப்படுத்தினோம். எனவே, அதுவும் நன்றாக இருந் தது. அவர்கள் நன்றாக நடந்துகொள்வதற்கும் நான் அவர்களை ஏற்றுக்கொள்வதற்கும் தொடர்பு இல்லை என்ற விஷயத்தில் நான் வித்தியாசமாக நடந்திருக்கலாம் என்று இப்போது நான் நினைக் கிறேன். அவர்களுடைய நடவடிக்கைகளினால் நான் ஏமாற்றமடைந்தபோது, அவர்களுக்குத் "தண்டனை" கொடுத்தேன் என்பதின் அடையாளமாக நான் என்னை அவர்களைவிட்டுக் கொஞ்சம் தூரப்படுத்திக்கொண்டேன். தேவன் என்னை அப்படித்தான் நடத்தினார் என்று நான் நினைத்தேன். எனவே, நானும் என் பிள்ளைகளை அப்படி நடத்தினேன். தேவன் என்னை அப்படி நடத்துவதில்லை என்று இப்போது எனக்குத் தெரியும். எனவே, நான் அவர்களை அப்படி நடத்தினதற்காக வருந்து கிறேன். ஆயினும், பெற்றோர்களாக இருந்து நாம் நம் பிள்ளைகளை வளர்ப்பதைவிட (அல்லது வளர்க்காததைவிட) தேவன் பெரியவர் என்பதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். என் பிள்ளைகள் இந்தச் சூழ்நிலையினூடாய் நேர்த்தியாகக் கடந்துசென்றார்கள் என்று நான் நினைக் கிறேன். ஆயினும், இந்த விஷயத்தைப்பற்றி நான் என் பிள்ளைகளுடன் பேசியிருக்கிறேன்; அவர்களுடைய மன்னிப்பையும் கேட்டிருக்கிறேன்.*